


முன்னாள் அமைச்சரும், விருதுநகர் தெற்கு மாவட்டச் செயலாளருமான கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் எம்.எல்.ஏ., – திருமதி ஆர்.ஆதிலட்சுமி ஆகியோரின் மகள் வழிப் பேரனும் – டாக்டர் பா.அருண் குமார் – உமாமகேஸ்வரி ஆகியோரின் புதல்வருமான ஏ. வைஷ்ணவ் – திருநெல்வேலி சரவணன் – திருமதி விஜயசங்கரி ஆகியோரின் புதல்வியான எஸ்.விகாஷ்னி ஆகியோரின் திருமண வரவேற்பு விழா நேற்று முன்தினம் மாலை சென்னை – திருவான்மியூரில் அமைந்துள்ள இராமச்சந்திரா கன்வென்ஷன் ஹாலில் நடைபெற்றது. இவ்விழாவில் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். முன்னாள் அமைச்சர்கள் தங்கம் தென்னரசு எம்.எல்.ஏ., அர.சக்கரபாணி எம்.எல்.ஏ., பி.மூர்த்தி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் கலாநிதி வீராசாமி, தங்கதமிழ்ச்செல்வன் உள்ளிட்ட கழக முன்னணியினர் உடன் உள்ளார்கள்.



சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் மாலை, சென்னை – நீலாங்கரையில் நடைபெற்ற – முன்னாள் ஒன்றியக் கழகச் செயலாளரும், முன்னாள் ஒன்றியப் பெருந்தலைவருமான (நினைவில் வாழும்) கே.எஸ்.இராமச்சந்திரன் அவர்கள் இல்லத் திருமண வரவேற்பு விழாவில் கலந்து கொண்டு மணமக்கள் சா.விக்னேஷ் – ம.ஜீவிதா ஆகியோரை வாழ்த்தினார். காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர், கழக இளைஞரணி மாநில துணைச் செயலாளர் அப்துல் மாலிக், இலத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் கே.எஸ்.ஆர்.கார்த்திகேயன், ஒன்றியப் பெருந்தலைவர் சாந்தி ராமச்சந்திரன், கே.எஸ்.ஆர்.கீர்த்திதரன் உள்ளிட்ட முன்னணியினர் உடன் உள்ளார்கள்.

கட்டணமில்லா அரிசியை 'பாலிஷ்' போட்டு – 30 ரூபாய்க்கு விற்று கொள்ளை அடிப்பதுதான் 'டம்மி' CM சொன்ன மாற்றமா?

சன்ன ரக பொன்னி அரிசியைக் கொள்முதல் செய்ய இந்தக் கோமாளி அரசு எப்போது டெண்டர் விட்டது?

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கேள்வி!

சென்னை, அக். 26- சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று விடுத்த வலைதளப் பதிவொன்றில், "மக்களுக்கான கட்டணமில்லா அரிசியை 'பாலிஷ்' போட்டு 30 ரூபாய்க்கு விற்றுக் கொள்ளை அடிப்பதுதான் டம்மி 'CM சொன்ன மாற்றமா?" என்றும் - "சன்னரக பொன்னி அரிசியைக் கொள்முதல் செய்ய இந்தக் கோமாளி அரசு எப்போது டெண்டர் விட்டது?" என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

சட்டமன்ற எதிர் கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ட்விட்டர் பதிவு வருமாறு:-

மக்களுக்கான கட்டணமில்லா அரிசியை பாலிஷ் போட்டு 30 ரூபாய்க்கு விற்று கொள்ளை அடிப்பது தான் Dummy CM சொன்ன மாற்றமா?



அரிசி விலையேற்றத்துக்கான தீர்வாக, கூட்டுறவு அங்காடிகளில் சன்னரகப் பொன்னி அரிசியை ரூ.30க்கு வாங்கலாம் என்று இந்த அரசு அறிவித்தது.

அதை நம்பி ரேஷன் கடைகளுக்குப் போனால், வழக்கமாக வழங்கப்படும் கட்டணமில்லா அரிசியை பாலிஷ் போட்டு, சன்னரகப் பொன்னி அரிசி என்று விற்கப்படுவதாக தமிழ் நாடெங்கும் பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். பல இடங்களில் அரிசியை திருப்பிக்கொடுத்தும் வருகின்றனர்.

மக்கள் முற்றுகையால் ஓட்டம் பிடித்த த.வெ.க. எம்.எல்.ஏ.!

கம்பத்தில் பாலிஷ் செய்யப்பட்ட அரிசி வழங்கப்பட்டதால், த.வெ.க எம்.எல்.ஏ.வை முற்றுகையிட்டு பொதுமக்கள் கேள்வி எழுப்பிய போது, கரூர் பாணியில் ஓட்டமெடுத்து இருக்கிறார் அந்த MLA.

தமிழ்நாட்டில் 2 கோடியே 28 லட்சம் குடும்ப அட்டைகள் இருக்கும் போது, வெறும் 250 இடங்களில் அதுவும் குடும்பத்துக்கு தலா 5 கிலோ மட்டும் என, 'சன்ன ரகப் பொன்னி' என்ற பெயரில், பாலிஷ் செய்யப்பட்ட அரிசி வழங்கப்படுவதாக தொடர்ந்து புகார்கள் வருகின்றன.

சிறப்பு விநியோகத் திட்டம் கண்டவர் - முத்தமிழறிஞர் கலைஞர்!

2007ல் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்ந்த போது, அன்றைய முதல்வராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்,

இந்தக் கோமாளி அரசு, சன்ன ரகப் பொன்னி அரிசியைக் கொள்முதல் செய்வதற்கு எப்போது டெண்டர் விட்டது? டெண்டர் எடுத்த நிறுவனங்கள் எவை? என்ன விலைக்கு அவர்கள் அரசுக்கு பொன்னி அரிசியை வழங்கினார்கள்? த.வெ.க அரசு பொதுமக்களுக்கு எவ்வளவு மானிய விலையில் அரிசியை வழங்குகிறது?

சிறப்பு பொதுவிநியோகத் திட்டத்தை அறிவித்து, வெளிப்படையான முறையில் டெண்டர் விட்டு, பாமாயில், துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, உள்ளிட்ட பொருட்களை மானிய விலையில் மக்களுக்கு வழங்கினார்கள்.

ஆனால், இந்தக் கோமாளி அரசு, சன்ன ரகப் பொன்னி அரிசியைக் கொள்முதல் செய்வதற்கு எப்போது டெண்டர் விட்டது? டெண்டர் எடுத்த நிறுவனங்கள் எவை?

என்ன விலைக்கு அவர்கள் அரசுக்கு பொன்னி அரிசியை வழங்கினார்கள்? த.வெ.க அரசு பொதுமக்களுக்கு எவ்வளவு மானிய விலையில் அரிசியை வழங்குகிறது? இது குறித்து பாலிஷ் எதுவும் போடாமல் வெளிப்படைத்தன்மையுடன் இந்த ஆட்சியாளர்கள் பதிலளிக்க வேண்டும்.

இவ்வாறு அப்பதிவில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

மாதவரத்தில் மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கல்!

சென்னை, அக்.26–

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 17 வது வார்டு வடபெரும் பாக்கம் பகுதியில் இயங்கி வரும் அரசு ஆதிதிராவிடர் நல துவக்கப்பள்ளி கடந்த வாரம் போதிய மாணவர்கள் இல்லாததினால் மூடவுள்ளதாக வும் மாணவர்கள் பக்கத்து பள்ளியில் சேர்ந்து கொள்ள வேண்டும் என்றும் ஆசிரியர் வலியுறுத்தியதாக அறிந்து, மாணவர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள், மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் மற்றும் நிர்வாகிகள் பள்ளிக்கு நேரில் சென்று சுமார் 95 ஆண்டுகாலம் பழமையான பள்ளியை மூடுவதை எதிர்த்து மாவட்ட கல்வி அலுவலரிடம் பேசி மீண்டும் திறப்பதற்கான ஏற்பாடு செய்தனர்.

இதனைத் தொடர்ந்து இப்பள்ளியில் மாணவர் இன்று மீண்டும் 8 மாணவர்கள் புதியதாக சேர்ந்தனர். மேற்படி பள்ளிக்கு மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நேரில் சென்று பார்வையிட்டு பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு நோட்டு புத்தகங்கள், இனிப்பு வழங்கி வாழ்த்து தெரிவித்தார். மேலும் பள்ளியில் இன்று பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் மருத்துவர்கள் இலவசமாக மருத்துவ முகாமை நடத்தி குழந்தைகளுக்கு உயரரம், எடை, பரிசோதனை ஆகிய வற்றை மேற்கொண்டு மருந்து மாத்திரைகளை இலவசமாக வழங்கினார்கள்.

17வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன், சி. மூர்த்தி, எஸ். பாலாஜி, பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம். என். அஜய் தென்னவன், கே. சண்முக பிரியன், எஸ். சிவகுமார், டி. வினோத், எஸ். நாகராஜ், ராஜ்குமார், டி.திவாகர், எம். மைக்கேல், இ. கார்த்திக், பி.செந்தில், கோவிந்தன், எம்.என்.தளபதி, சின்னத்தோப்பு சதீஷ்குமார் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.



கரூர் மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில் மாவட்ட செயலாளர் வி. செந்தில் பாலாஜி சிறப்புரையாற்றினார். இதில் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

கரூர் மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

மாவட்ட செயலாளர் வி.செந்தில் பாலாஜி சிறப்புரையாற்றினார்!

கரூர், அக். 26-

கரூர் மாவட்ட செயற்குழு கூட்டம் 23.10.2026 அன்று வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு கரூர் மாவட்டக் கழக அலுவலகம், (கலைஞர் அறிவாலயம்) தளபதி அரங்கத்தில் கரூர் மாவட்ட கழக அவைத் தலைவர் டி.ராஜேந்திரன் தலைமையிலும், தலைமைக் கழகப் பிரதிநிதிகள், தலைமை தணிக்கைக்குழு உறுப்பினர் தி.அ.முகமது சகி (முன்னாள் எம்.பி). பெரம்பலூர் நகர செயலாளர் எம்.பிரபாகரன் (முன்னாள் எம்.எல்.ஏ.), முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கரூர் மாவட்டக் கழக செயலாளர் விசெந்தில்பாலாஜி சிறப்புரையாற்றினார்.

கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் கே.சி.பழனிச்சாமி, நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், சட்டத்துறை இணைச் செயலாளர் என்.மணிராஜ், நெசவாளர் அணி செயலாளர் பரணி கே.மணி, கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணைச் செயலாளர் முனவர் ஜான், வர்த்தக அணி துணைச் செயலாளர் வே.பல்லவிராஜா, தொழிலாளர் அணி துணை செயலாளர் பி.விஜயக்குமார்,

அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர். இளங்கோ, குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் சூரியனூர் அ.சந்திரன், கரூர் மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர், கரூர் மேற்கு பகுதி செயலாளர் தாரணி பி.சரவணன்,

*மாவட்டக் துணை செயலாளர்கள், எம்.எஸ். கே.கருணாநிதி, பூவை ரமேஷ்பாபு, மகேஸ்வரி சுப்பிரமணி, பொருளாளர் பி.வி.பரத். தலைமை செயற்குழு உறுப்பினர்கள் சுப.ராஜகோபால், காலனி செந்தில்,ஜி.பாலகுருபரன், எம்.துரைராஜ், கே. சுப்பிரமணி, க.சிவகாமசுந்தரி (முன்னாள் எம் எல்ஏ), பொதுக்குழு உறுப்பினர்கள் என்.எஸ்.ஆறுமுகம், கே.வேலுச்சாமி, வி.கே.டி.ராஜ்கண்ணு, பி.பி.சரவணன், சி.கருப்பையா (எ) தர்மர், கே.சாமிநாதன், ஈ.ஜாபருல்லா, ஏ.நஞ்சுண்டேஸ்வரன், ச.சிவகாமி சண்முகம், எம். சிவசாமி, எஸ்.காளியப்பன், என்.ராமலிங்கம், பி.சிவகாமசுந்தரி, கலாவதி சக்திவேல் பி.ஏ.குமார். கரூர் மாநகர கழக செயலாளர் எஸ்.பி.கனகராஜ், கரூர் தெற்கு பகுதி செயலாளர் க.சுப்பிரமணியன், கரூர் மத்திய கிழக்கு பகுதி செயலாளர் ஆர்.எஸ். ராஜா, கரூர் மத்திய மேற்கு பகுதி பொறுப்பாளர் ஆர்.ஜோதிபாசு, கரூர் மத்திய பகுதி பொறுப்பாளர் வி.ஜி.எஸ்.குமார், கரூர் வடக்கு பகுதி பொறுப்பாளர் எம்.பாண்டியன், அரவக்குறிச்சி மேற்கு ஒன்றிய செயலாளர் எம்.எஸ்.மணியன், அரவக்குறிச்சி கிழக்கு ஒன்றிய செயலாளர் என். மணிகண்டன், க.பரமத்தி தெற்கு ஒன்றிய செயலாளர் கே.கருணாநிதி, க.பரமத்தி வடக்கு ஒன்றிய கழக செயலாளர் த.கார்த்திக், கரூர் மேற்கு ஒன்றிய செயலாளர் சி.வளர்மதி, கரூர் வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் வி.கே. வேலுச்சாமி, கரூர் கிழக்கு ஒன்றிய பொறுப்பாளர் ப.முத்துக்குமார், தாந்தோணி கிழக்கு ஒன்றிய செயலாளர் எம்.ரகுநாதன், தாந்தோணி மேற்கு ஒன்றிய செயலாளர் கே.பாஸ்கரன், கிருஷ்ணராயபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் கே.ரவிராஜா, கடவூர் வடக்கு ஒன்றிய செயலாளர் எம்.ராமலிங்கம், கடவூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் கே.வீராசாமி (எ) சுதாகர், கடவூர் மேற்கு ஒன்றிய பொறுப்பாளர் என்.செல்வராஜ், கிருஷ்ணராயபுரம் கிழக்கு ஒன்றிய பொறுப்பாளர் சி.கதிரவன், கிருஷ்ணராயபுரம் தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் எல். கரிகாலன், குளித்தலை மேற்கு ஒன்றிய பொறுப்பாளர் ப.தியாகராஜன், தோகைமலை மேற்கு ஒன்றிய செயலாளர் இ.ராமர்(முன்னாள் எம்எல்ஏ), தோகைமலை கிழக்கு ஒன்றிய செயலாளர் ஜி.அண்ணாதுரை, குளித்தலை நகர செயலாளர் இரா. மாணிக்கம் (முன்னாள் எம்எல்ஏ), பள்ளப்பட்டி நகர பொறுப்பாளர் அ.வாசிம் ராஜா, புகழூர் நகரசெயலாளர் ஏ.குணசேகரன், புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூர் செயலாளர் க.முரளிராஜா, புலியூர் பேரூர் செயலாளர் கா.அம்மையப்பன். உப்பிடமங்கலம் பேரூர் செயலாளர் சி.தங்கராஜ், கிருஷ்ணராயபுரம் பேரூர் செயலாளர் எம்.சசிக்குமார், பழைய ஜெயங்கொண்டம் பேரூர் செயலாளர் ஆர்.மோகன்ராஜ், மருதூர் பேரூர் செயலாளர் இ.ரவீந்திரன், நங்கவரம் பேரூர் செயலாளர் எம்.முத்து (எ) சுப்பிரமணி, அரவக்குறிச்சி பேரூர் பொறுப்பாளர் பி.எஸ். மணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில், கழகத் தலைவர் மாண்புமிகு தளபதி அவர்களின் தலைமையில் 22.08.2026 அன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட கழக நிர்வாக சீரமைப்பு தீர்மானத்தின்படி, கரூர் மாவட்டத்திற்குட்பட்ட பகுதி, நகர, ஒன்றிய, பேரூர், வார்டு, கிளைக் கழகங்கள் கீழ்கண்டவாறு அமைக்கப்பட்டு 23.10.2026 அன்று நடைபெற்ற கரூர் மாவட்ட செயற்குழு கூட்டத்தில் தலைமைக் கழகப் பிரதிநிதிகள், தலைமை தணிக்கைக்குழு உறுப்பினர் தி.அ.முகமது சகி, பெரம்பலூர் நகரக் கழகச் செயலாளர் எம்.பிரபாகரன் ஆகியோர் முன்னிலையில் கரூர் மாவட்ட செயற்குழு கூட்டத்தில் கழகத் தலைமைக் கழகம் அங்கீகரிக்கப்படுகிறது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.